Written by
Saturday, 16 August 2008 15:29 -

தொழிலாளி என்கிற பதத்தைக்கு அர்த்தம் என்ன? வலேை செய்கிறவன் என்று அர்த்தமாகும். 'யாவரும்தான் வலேை செய்கிறார்கள். அப்படி இருக்க ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் தொழிலாளி என்று பயெர் கொடுக்கப்பட்டிருப்பானேன்?' என்றால், பிறருக்கு ஆக தொண்டு செய்தும் மனுதர்ம சாஸ்திரப்படி, தொழிலாளியாகவே வாழ்பவர்கள், தொழிலாளி என்று அழகைக்கப்படுகிறார்கள். அந்தக் கருத்தில் பார்த்தால், திராவிடர்களாகிய நாம் யாவரும் தொழிலாளிகள் அல்லவா என்று கடேகிறனே.

எந்திரங்களின் மூனனால் நிறப்பவர்கள் மாத்திரம் தானா தொழிலாளர்கள்? வண்டி ஓட்டுகிறவர்கள், வண்டி இழுக்கிறவர்கள், வீ தி கூட்டுகிறவன், கக்கூசுக்காரன், வண்ணார், நாவிதர், கூயவன், உழுபவன், விதபை்பவன், தச்சன், கொல்லன், சக்கிலி, பறையன், சகெ்கு ஓட்டுகிறவன், நசெவு நயெ்பவன் மூதலிய சரீ ரத்தால் உழதை்து வயிற்றுக்கு, வாழ்வுக்கு மாத்திரம் சம்பாதித்து அன்றாட வாழ்க்ககைக்கு, அன்றாடம் வரும்படி எதிர்பார்த்து நிற்கும் யாவரும் தொழிலாளி அல்லவா?

இன்று இந்த மாதிரி தொழிலாளிகள் யார்? பார்ப்பனர்களா? சத்தியர்களா? அல்லவே! சூத்திரர்கள்தானே இந்த மாதிரியான தொழிலாளிகளாய் இருக்கிறார்கள். அந்தச் 'சூத்திரர்' என்கின்ற பட்டியலில் சட்டப்படியும், சாஸ்திரப்படியும், கடவுள் சிருஷ்டிப்புபடியும், காரியத்தில் நடப்புப்படியும் இருந்து வருகிறோம்! இதை எந்தத் தொழிலாளியாவது மறுக்க முடியுமா? நான் மலேே சொன்ன தொழில்களில் ஒரு 'பிராமணன்' இருக்கிறானா? ஆகவே, சரீ ரத்தினால் பாடுபடும் வலேை அவ்வளவும் சூத்திரர்கள் என்று அழகைக்கப்படும் ஆக்கப்பட்டிருக்கும் திராவிடர்களாகிய நம் கயைிலயேே இருப்பதால், திராவிடர் இயக்கம் தொழிலாளிகள் இயக்கம் என்று சொல்லுகிறனே.

ஆகவே திராவிடர் கழகம் என்பது, 4 ஆவது வர்ணத்தாராக ஆக்கப்பட்டு, சமுதாயத்தில் இழிவுபடுத்தி, சரீ ரப்பாடுபட வணே்டியதாகக் கட்டாயப்படுத்தித் தாழ்த்தி வதை்திருக்கும் ஓரு 4 கோடி மக்கள் கொண்ட சமுதாயத்தின் விடுதலகை் கழகம் என்றுதான் சொல்ல வணே்டும். இப்படிப்பட்ட விடுதலகை் கழகத்ததை் தொழிலாள மக்கள் உணர்ந்து கொள்ளாமல், திராவிடர்களின் எதிரிகளின் ஆதிக்கத்திற்காக ஏறப்பட்டிருக்கும் காங்கிரசிலும், திராவிட எதிரிகள் தலமைை வகித்தும் நடத்தும் கம்யூனிஸ்ட் கடசியிலும் சார்ந்திருப்பதோடு, திராவிடர்களின் எதிரிகளுக்கு அடிமகைளாகவும் ஒற்றர்களாகவும் இருக்கும் பூராணப் பிரசங்க, பூராண வாழ்வுக்காரர்களுக்குச் சிஷ்யர்களாகவும் இருப்பது எவ்வளவு அறியாமை, மானக்கடேு என்று பாருங்கள்.

கவலையுள்ள எங்களை் போன்றவர்களையும் திராவிடப் பிள்ளகைள் பார்ப்பனர்களுடன் சரே்ந்தும் கொண்டு அடிக்கிறார்கள், உதகை்கிறார்கள், காலித்தனம், காலடித்தனம் செய்கிறார்கள் என்பதல்லாமல் வறேு என்ன? இப்படிப்பட்ட மானம் கெட்ட மானத்தில், ஈனத்தில் கவலயைில்லாத ஜாதி எந்தக் காலத்திலும் மூன்வர மூடியாது. ஆகவே நம் திராவிடர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், சூத்திரர்களுக்கும் விடுதலை, மாறுதல் வணே்டுமானால் மூதலில் மானம் வரவணே்டும். எதிரிக்கு விபீ ஷணனாய், அனுமாராய் இருப்பதபை் பற்றி வடெ்கப்பட்டு எதிரியை, எதிரி ஆயுதத்தை வறெுக்க வணே்டும். தனது இழிவுக்கும் அடிப்படை எது என்று பார்த்தது அதபை் பயெர்த்தது தகர்த்தறெிய வணே்டும்.

சில தொழிலாளர் தலவைர்கள் என்பவர்கள் என்மீ தும் கூரோதம் கொண்டிருக்கிறார்கள். என்னபை் பற்றி விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். 'ராமசாமி நாயக்கர் மதத்தில், கடவுளில்

தொழிலாளர்கள் விடுதலை பெற முதலில் மானம் வரவேண்டும் !

Written by
Saturday, 16 August 2008 15:29 -

பிரவேசிக்காவிட்டால் நான் அவருடன் நேசமாக இருப்பேன். ஆனால், அவர் நாத்திகம் மதத்துவேஷம் பேசுகிறார். ஆகையால் ஜாக்கிரதையாக இருங்கள்' என்று உங்கள் தலைவர்களில் சிலர் சொல்லி, உங்களை என்னிடம் அணுகவிடாமல் செய்கிறார்கள். அதைப் பற்றி எனக்கு கவலையில்லை.

எது மதம், எது கடவுள் என்பது இந்த அன்னக் காவடிகளுக்குத் தெரியுமா? நான் எந்த மதத்தை, எந்தக் கடவுளை ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகிறேன் என்பது, இந்தத் தற்குறிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். எந்த ஒரு மதம் ஒரு மனிதனை, 'பிராமணனாக'வும் ஒரு மனிதனைச் சூத்திரனாகவும் அதாவது தொழிலாளியாகவும் பாட்டாளியாகவும், பறையனாகவும் உண்டு பண்ணிற்றோ, அந்த மதம் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறேன். ஒழிய வேண்டுமா வேண்டாமா? (ஆம், ஒழிய வேண்டும் என்னும் பேரொலி).

எந்தக் கடவுள் ஒருவனுக்கு நிறையப் பொருள் கொடுத்தும், ஒருவனுக்குப் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழ உரிமை கொடுத்தும் மற்றொருவனை உழைத்து உழைத்து ஊரானுக்குப் போட்டுவிட்டுச் சோற்றுக்குத் திண்டாடும்படியும், ரத்தத்தை வேர்வையாய்ச் சிந்தி உடலால் உழைத்தவண்ணம் இருந்து கீழ் மகனாய் வாழும்படியும் செய்கிறதோ, அந்தக் கடவுள் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறேன். அந்தக் கடவுள் ஒழிய வேண்டுமா, வேண்டாமா? ஆகவே தோழர்களே! இது சொன்னால் நான் நாத்திகனும், மதத் துவேஷியுமா? 'ஆம் ஒழிய வேண்டும்' என்று சொன்ன நீங்கள் மதத் துவேஷியா, நாத்திகர்களா?

(சென்னை 'பி அண்ட் சி மில்' தொழிலாளர்கள் கூட்டத்தில் *30.6.1946* அன்று ஆற்றிய உரை)

http://www.keetru.com/rebel/periyar/50.php

2 / 2